

சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி தீரன் சின்னமலை அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு, நேற்று (03.08.2025) தியாகி தீரன் சின்னமலை அவர்கள் தூக்கிலிடப்பட்ட இடமான சேலம் மாவட்டம், சங்ககிரி கோட்டையில் தியாகி தீரன் சின்னமலை அவர்களின் திருவுருவப் படத்திற்கு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், தமிழ்நாடு அரசின் சார்பில் மலர் வளையம் வைத்து, மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி, மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கௌதம் கோயல், சங்ககிரி வருவாய் கோட்டாட்சியர் திருமதி ந.லோகநாயகி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

ஒன்றியப் பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை! செஞ்சி ஒன்றியம் – மேல் பாப்பம்பாடியில்

# “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம்!

## முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

செஞ்சி, ஆக. 4-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் மேல் பாப்பம்பாடி ஊராட்சியில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்டம்முகாம் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.ஊராட்சி மன்ற தலைவர்கள் சக்தி,மார்ட்டின் புஷ்பராஜ், சந்தானம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வட்டார வளர்ச்சி அலுவலர் நடராஜன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ கலந்து கொண்டு உங்களுடன் ஸ்டாலின்திட்டத்தினை தொடங்கி வைத்து பொது மக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களைப் பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்கு அறிவுறுத்திய

முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ. தொடர்ந்து முகாமில் பெறப்பட்ட மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காண வேண்டும் என அதிகாரிகளுக்கு அவர் தெரிவித்தார்.

முன்னதாக உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில்அனைத்து துறை சார்பில்பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் குறித்து முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான்

எம். எல்.ஏ. நேரில் சென்று பார்வையிட்டு பொது மக்களிடம் இருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

அப்போது முகாமில் கை கால் பாதிக்கப்பட்டு மாற்றுத்திறனாளி என சான்று பெறுவதற்காக மனு செய்தவருக்கு உடனடியாக முன்னாள் அமைச்சர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ முன்னிலையில் மருத்துவர்கள் பரிசோதனை மேற்கொண்டு தேர்வு செய்தனர்.

தொடர்ந்து வேளாண்மைதோட்டக்கலை துறை சார்பில் விவசாயி களுக்கு பழ மரக்கன்றுகளையும் விதைகளையும் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ விவசாயிகளுக்கு வழங்கினார்.

முகாமில்மேல் பாப்பம்பாடி, வேலந்தாங்கல், புத்தகரம் ஆகிய கிராமங்களிலிருந்து ஏராளமான பொது மக்கள் வருகை தந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை வழங்கினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ் செல்வன், செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளர் பச்சையப்பன். வட்டார வளர்ச்சி அலுவலர் பிரபா சங்கர், மாவட்ட கவுன்சிலர் அகிலா பார்த்திபன், ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர். துணைவட்டார வளர்ச்சி அலுவலர் சசிகலா அனைவருக்கும் நன்றி கூறினார்.

முனைவர் சி.பிரதீப் தலைமை! செந்தில்முருகன் வரவேற்புரை!

# விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறியாளர் அணி அறிமுக - ஆலோசனைக் கூட்டம்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. – எஸ்.கே.பி.கருணா சிறப்புரை!

திண்டிவனம், ஆக. 4-

திண்டிவனத்தில் நடைபெற்ற விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக பொறியாளர் அணி ஒன்றிய ,நகர ,பேரூர் கழக நிர்வாகிகள் அறிமுக கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம். எல்.ஏ ,மாநில பொறியாளர் அணி செயலாளர் எஸ். கே. பி கருணா ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.மாநில பொறியாளர் அணி துணைத்தலைவர் முனைவர் சி.பிரதீப் தலைமை தாங்கினார். மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் செந்தில் முருகன் அனைவரையும் வரவேற்றார்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக பொறியாளர் அணி ஒன்றிய, நகர, பேரூர் கழகநிர்வாகிகள் அறிமுக கூட்டம் திண்டிவனம் ஹோட்டல் ஆர்யாஸ் கார்டனில் நடைபெற்றது.கூட்டத்திற்கு மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளரும்,பொறியாளர் அணி கடலூர் மண்டல பொறுப்பாளர் சி. பிரதீப் தலைமை தாங்கினார்.விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறியாளர் அணி தலைவர் சக்தி சரவணன், மாவட்ட துணைத்தலைவர் டிபி ஏழுமலை, மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர்கள் ஜிபிஎஸ் முருகன், ரசூல் பாஷா, சரவணன், சிவப்பிரகாசம், வெங்கடேச பெருமாள், மலையரசன், மோகன்தாஸ் ,பிரபாகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் ஜி. எஸ். செந்தில் முருகன் அனைவரும் வரவேற்றார்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளரும் ,செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் ,பொறியாளர் அணி மாநில செயலாளர் எஸ். கே. பி. கருணா ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர்.

கூட்டத்தில்முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார்,ஒன்றிய செயலாளர்கள்அண்ணாதுரை, பழனி, ரவிச்சந்திரன், திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன், உள்ளிட்ட ஒன்றிய நகரப் பேரூர் கழக பொறியாளர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில்புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக பொறியாளர் அணி நிர்வாகிகள் அறிமுகம் செய்துஅனைவருக்கும் சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர்.

கழகத் தலைவர் முதலமைச்சர் மு .க . ஸ்டாலின் அவர்களின் உத்தரவுப்படி ஓரணியில் தமிழ்நாடு கருத்தினை பொறியாளர் அணி சார்பில் முன்னெடுத்தல், விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள கிளைகள் தோறும் பொறியாளர் அணி உறுப்பினரர் சேர்க்கையை தீவிர படுத்துதல் உள்ளிட்ட கழக ஆக்கப் பணிகள் குறித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

திண்டிவனம் நகர பொறியாளர் அணி அமைப்பாளர் வெங்கடேசன்அனைவருக்கும் நன்றி கூறினார்.



திண்டிவனத்தில் நடைபெற்ற விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக பொறியாளர் அணி ஒன்றிய ,நகர ,பேரூர் கழக நிர்வாகிகள் அறிமுக கூட்டத்தில்விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர்செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ சிறப்புரையாற்றினார். உடன் பொறியாளர் அணியின் மாநில செயலாளர் எஸ். கே. பி. கருணா, மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் கடலூர் மண்டல பொறுப்பாளர் முனைவர் சி.பிரதீப், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார்,ஒன்றிய செயலாளர்கள்பழனி, ரவிச்சந்திரன், நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் ஜி. எஸ். செந்தில் முருகன் உள்ளனர்.

# அதிகார நந்தியும் அவதார நந்தியும்

## கணையாழி தலையங்கம்




உடல் நலம் பெற்றுப்
பணிக்குத் திரும்பியிருக்கும்
முதல்வரை வாழ்த்துவோம்!

பொதுமக்கள் பயன்பெற
“நலம் காக்கும் முகாம்” போலவும்
பணிகளைச் செய்திருக்கிறான்
கங்கை கொண்ட சோழன்!

கோயில் கட்டினான்
கங்கை நீரைக் கொண்டுவந்து
தலைநகரைப் புனிதமாக்கினான்
என்பதோடு
மக்கள் நலம் பேண
மருத்துவ மனைகள்!
ஆரோக்கிய சாலைகள்
மருத்துவ மண்டபங்கள்
‘வியாதிப்பட்டுக்’ கிடைக்கும் நோயாளிக்கு
வைத்தியம், உணவு, தங்கும் வசதிகள்
கட்டணம் இல்லாமல் கிடைக்கச் செய்தவன்
கங்கை கொண்ட சோழன் என்றும்
கல்வெட்டுகள் சொல்கின்றன.

முதலாம் இராசேந்திர சோழனைக் காண
வந்து சென்றிருக்கிறார் பிரதமர்!
தானே கங்கை கொண்ட சோழனாகக்
கைகளில் கங்கை நீர்ச் சொம்பு!
கங்கை கொண்ட சோழ ஈசுவரருக்கு
நரேந்திர சோழரின் தீப ஆராதனை!
இராசேந்திர சோழனுக்கும்
கிடைத்திராத வாய்ப்பு!

முதலாம் இராசேந்திரனின்
இயற்பெயர் மதுராந்தகன்!
வரலாறு சொல்லும் பெயர்
கங்கை கொண்ட சோழன்!

பிரதமரைப் போல கைச் சொம்பில்
கங்கை நீரைக் கொண்டு வந்ததால்
கங்கை கொண்ட சோழன் ஆகவில்லை.

காசிக்குச் சென்று
கங்கைநீர்ச் சொம்போடு
வருகிறவர்கள் எல்லாம்
கங்கை கொண்ட சோழர்கள் இல்லை!
கங்கை வரை சென்று
வென்று வந்ததால்
கங்கை கொண்ட சோழன்!
‘சலமயமான சயத்தம்பம்’
நாட்டியவன் என்று
திருவாலங்காடு செப்பேடு சொல்கிறது!
தந்தை இராசராசனும்
பெறாத வெற்றி என்பதால்
தலைநகர் பெயரே
கங்கை கொண்ட சோழபுரம்!

தஞ்சையில் இராசராசேச்சுவரம் என்றால்
தனக்குக் கங்கை கொண்ட சோழேச்சுரம்!
தான் உருவாக்கிய ஏரிக்குச்
சோழகங்கம்!

எல்லாவற்றிலும் கங்கையை
இணைத்துக் கொண்டவன்.
“கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி” என்ற
சிலப்பதிகார வரிகளைச்
செயலில் காட்டிய
கங்கை கொண்ட காவிரி நாடன்!

தந்தைக்குத் “திருமகள் போல”
மெய்க்கீர்த்தி என்றால்
தனக்குத் “திருமன்னி வளர.”

“வங்க பாலர்கள்”,நூலில்
ஆர்.டி.பானர்ஜி சொல்கிறார்
கங்கைப் படையெடுப்பில் சென்று
மேற்கு வங்கத்தில் தங்கிய படைத் தலைவன்
சாமந்த சேனன் மரபினர்தான்
வங்கத்தை ஆண்ட
வங்க சேன் மரபினராம்.

வங்கச் சைவ மரபுக்கும்
தமிழ்ச் சைவ மரபுக்கும்
கூட்டணியை உருவாக்கியவன்
கங்கை கொண்ட சோழனாம்!

வணிகத்தைப் பெருக்கக்
கடல் கொள்ளையைத் தடுக்கக்
கடலாண்ட காவலன்!
“பூர்வ தேசமும் கங்கையும் கடாரமும் கொண்ட
கோப்பரகேசரி”ஆகியிருக்கிறான்!

சிவன் கோயில்களில் நந்தி இருக்கும்!
சாதாரண நந்தி
பெரிய நந்தி
கைலாச நந்தி
அதிகார நந்தி
அவதார நந்தி என்று
ஏதாவதொரு நந்தி
எல்லாச் சிவன் கோயில்களிலும் இருக்கும்!

கங்கைகொண்ட சோழேச்சுரத்தில்
இருப்பது அதிகார நந்தி!

ஆயுதம் எடுக்காமல் நடத்துகிற
வணிகப் போரில்
இப்போது பல நாடுகளையும்
மிரட்டிக் கொண்டிருக்கிறது
ஓர் அதிகார நந்தி!

நான் சொன்னால் போர்!
நிறுத்தச் சொன்னால் சமாதானம்!
இல்லையென்றால் அபராதம்!

கட்டைப் பஞ்சாயத்து நிலையில்
உலக அரசியல்!
வல்லரசு என்றால்
நல்லரசாக இருக்க வேண்டாமா?

உலகுக்கே
ஜனநாயக வகுப்பு எடுக்கிறவர்கள்
முன்மாதிரியாக இருக்க வேண்டாமா?
ஜனநாயகம் என்பது
பெரும்பான்மை மக்களுக்கானது
என்பதில்லை
சிறுபான்மை மக்களுக்குமானது என்பதை
உணர்த்த வேண்டாமா?
இப்படியெல்லாம்
கற்றுக்கொள்ள நிறையவே இருக்கின்றன
கங்கை கொண்ட சோழனிடம்!

கங்கை கொண்ட சோழனுக்குக்
கப்பல் படை இருந்தது!
ஆனாலும்
சீனாவுக்குத் தூதுக்குழு அனுப்பி
நட்புடன் இருந்ததற்கான
சான்றுகளாகத் தஞ்சையில்
2165 சீனக் காசுகள்!

கங்கை கொண்ட சோழனிடம்
யானைப் படை இருந்தது!
ஆனாலும்
கங்கை கொண்ட சோழபுரத்தில்
சிவனுக்குக் கோயில்!
எண்ணாயிரத்தில்
சுந்தர சோழ ஆழ்வார் கோயில்!
ஈழத்தில் இராசேந்திர சோழப்
பெரும்பள்ளி!
நாகப்பட்டினத்தில் புத்த விகாரைக்குப்
பள்ளிச் சந்தம் உறுதி! என்று
மத நல்லிணக்கத்துக்கும்
முன்மாதிரியாக இருந்திருக்கிறான்!

அதிகார நந்தியும்
அவதார நந்தியுமாக
உலகம்
அல்லாடிக் கொண்டிருக்கும் நிலையில்
இப்போதும்
கற்றுக்கொள்ள நிறையவே
இருக்கின்றன
கங்கை கொண்ட சோழனிடம்!



அன்புடன்
**ம.ரா.**

நன்றி : **கணையாழி**
**ஆகஸ்ட் - 2025**